மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அரிய யோசனை. அது கொள்கை அளவில் நாம் முடிவெடுக்க வேண்டிய யோசனை. தனியார் மருத்துவ மனைகளை நாம் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தலாம் என்பது. கேள்வி நேரத்திலே நாம் கொள்கையைப் பற்றி விவாதிக்கக் கூடாது என்பது நம்முடைய விதி முறைகளிலே இருக்கிற காரணத்தாலே, அதற்குப் பதில் தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1975 முதல் எம்.பி.பி.எஸ். படித்து முடித்த டாக்டர்கள் எண்ணிக்கை.

*வினா எண். 388—திரு. சு. பாலன், திரு. து. புருஷோத்தமன், திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) 1975 ஆம் ஆண்டு முதல் 29—10—1980 வரையில் எம்.பி.பி.எஸ்., படித்து முடித்துள்ள டாக்டர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு பெற்று வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 5.942,

(ஆ) ஒருவரும் இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வியின் போது, பல உறுப்பினர்கள் பல்வேறு மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் தேர்ச்சி பெற்றவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறபோது, மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லை என்று சொல்வதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள் யாரையும் நாம் பணியில் அமர்த்தாமல் இல்லை. அவர்களுக்கெல்லாம் பணி கொடுத்திருக்கிறோம் என்பதைத்தான் மூலக் கேள்வியிலேயே பதில் அளித்திருக்கிறேன். ஆனால் தற்காலிகமாக மருத்துவமனையிலே டாக்டர்களை அமர்த்த வேண்டும் என்றால் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ்—அவர்களிடத்திலே தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், எந்த வருடம் பாஸ் செய்தார்கள்

என்ற விவரத்துடன் பெயரைக் கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுக்கும் தேதியில் இருந்து பிரையாரிட்டி வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் 2,881 ஆண்களும், 650 பெண்களும் சேர்ந்து மொத்தம் 3,531 பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5,940 (டாக்டர்களில்) பேர்களில் மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? தேர்வு பெற்றவர்களுக்குக் கூட இன்னும் வேலை கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, சரியாகப் புள்ளிவிவரம் இல்லை என்றாலும் கூட, இது குறித்து ஏற்கனவே நான் மாண்புமிகு உறுப்பினருடன் பேசி இருக்கிறேன். விவாதித்து இருக்கிறேன். அப்பேர்ப்பட்ட பிரச்சினை எழுகின்ற நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிச்சயமாக இந்த முறை எல்லோருக்கும் இடம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநிலத்தில் இருந்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் வெளி நாடுகளுக்கு, குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் செல்லும் போது, இங்கே அவர்கள் பெற்ற அந்தப் பட்டத்தை அங்கீகரித்து வேலை கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அதை மற்றவர்கள் அங்கீகாரம் செய்கின்ற அளவுக்கு படிப்பில் திருத்தத்தையோ அல்லது வேறு வகையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இங்கே படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அப்படிப் போகிறவர்கள் நமக்கு அன்னிய செலாவணி எல்லாம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அந்த விவாதத்தில் நாம் நுழையாமல் அப்படி வெளி நாடுகளுக்கு போய் பணியாற்றுகிறவர்களின் மேல் நமக்கு எந்த விதமான கன்ட்ரோலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்வு பெற்றுள்ள டாக்டர்கள் தங்களுக்குப் போடப்பட்ட மருத்துவமனைகளில் நியமனம் செய்யப்பட்டும் அதில் சேராமல் இருக்கிறார்கள். அதனால் நிறைய இடங்களில் மருத்துவர்கள் இல்லாமல் இருக்கிறார்கள்.

எனவே புதிதாகப் படித்து வெளி வருகின்றவர்களை யார் யார் எந்தெந்த ஊர்களுக்குப் போய் பணிபுரியத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு எம்.பி.பி.எஸ். முடித்தவர்களைக் கூட நாம் நியமனம் செய்யலாம். இது குறித்து அரசு ஆலோசனை செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நான் கூடக் கொஞ்சம் கண்டிப்பாகத்தான் இருக்கிறேன். நண்பர்கள் கூட சங்கடப்படுகிறார்கள். நாம் ஒருவரை ஒரு இடத்திலே போடுவோமேயானால், அவர்கள் பல்வேறு வகையிலே சிபாரிசு செய்து மீண்டும் மாறுதலுக்கு வருகிறார்கள். அப்படி வருகிற நேரத்தில் நான் கொஞ்சம் கண்டிப்பாக இருக்கிறேன். தொலை நோக்கில் பார்க்கும் போது (far-sightedness) அந்த நேரத்தில் அவர்கள் விருப்பத்திற்கு நாம் பணிய முடியவில்லை என்றாலும் கூட, இன்றைக்கு நாம் கண்டிப்பாக இருந்து கொண்டு அவரவர்கள் இடத்திலே அவரவர்கள் இருக்க வேண்டும் என்ற ஆணையை அரசாங்கத்தின் மூலம் அனுப்பி இருக்கிறோம். இதனால் அரசாங்கத்திற்கும் நல்ல பெயர், மக்கள் மத்தியிலும் சுமுகமான நிலை ஏற்படும். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் கழகத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற மருத்துவர்கள் இத்தனை காலம் கிராமங்களில் கட்டாயமாக இருந்து பணியாற்ற வேண்டும் என்கிற வரைமுறையை அரசு கொண்டு வருமா? பல மருத்துவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்கிற போது அங்கேயே பணி புரிய விருப்பப்படாமல் நகரத்தை நோக்கியே வரவேண்டும் என்ற அவாவில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையை மாற்றுவதற்கு இத்தனை ஆண்டு காலம் கட்டாயமாக கிராமப்புறத்தில் பணியாற்ற வேண்டும் என்ற உத்தரவை அரசு அறிவிக்க முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டபூர்வமாக இத்தனை ஆண்டுகள் அவர்கள் அங்கே பணியாற்ற வேண்டும் என்று சொல்வதற்கு இப்போதுள்ள நம்முடைய அதிகார வரம்பிற்குள் செய்ய முடியாது. இருந்தாலும் அட்மினிஸ்ட்ரேடிவ் நடவடிக்கை மூலமாக அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். முயற்சி எடுத்து இருக்கிறோம். அது ஓரளவிற்கு வெற்றி பெற்று இருக்கிறது.

1981 மார்ச் 5]

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுகளில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருந்த இடங்களுக்கும் குறைவான அளவிற்கு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆஜராகி இருந்தும், அவர்கள் முழுவதும் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு இருந்தும், அவர்களில் பலரை தகுதி இல்லை என்று சொல்லி தேர்வு ஆணைக் குழு தேர்ந்தெடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த இடங்களுக்கு முழுமையாக அவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்கும் அந்த முறையிலோ அல்லது அவர்களுடைய செயலிலோ நாம் எந்த வகையிலும் குறுக்கிட முடியாது. அந்த அதிகாரம் நமக்கு இல்லை. ஆனால், இந்த ஆண்டு அவர்களுக்கு நாம் சில கைய்ட் லைன்ஸ் கொடுத்து இருக்கிறோம். அதனால் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு பதில் அளிக்கும்போது அவ்வளவு உறுதியாகச் சொன்னேன். அவர்கள் கூடிய வரையில் அந்த கிராமப்புறங்களில் இருந்து வரும் டாக்டர்களை, குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறோம். அப்படி எடுக்கவில்லை என்றால், ஏன் அப்படிச் செய்யவில்லை என்று கேட்கிற அதிகாரம் நமக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பநல அறுவைச் சிகிச்சையினால் இறந்தவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை.

*வினா எண். 389—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடும்பநல அறுவைச் சிகிச்சையின் விளைவாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பங்களுக்கு அரசு இழப்பு ஈடு கொடுக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) குடும்பநல அறுவை சிகிச்சையினால் உயிர் இழக்கும் நபரின் குடும்பத்திற்கு ரூ. 5,000-க்கு மேற்படாமல் உதவித் தொகை வழங்கப்படுகிறது.